# 2006–2007ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தை (சட்டம் எண்.16/2003) இயற்றியுள்ளது.

தமிழ்நாடு நிதி நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின் பிரிவு 6 (2) ன்படி, நிதித்துறைப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர், வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் போக்கு மற்றும் வரவு–செலவுத் திட்ட இலக்குகளை எய்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய தீர்வு நடவடிக்கைகள் குறித்து ஒவ்வொரு அரையாண்டிலும் ஆய்வு செய்து, அத்தகைய ஆய்வின் முடிவை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க வேண்டும். இவ்வாறான ஆய்வின் முடிவை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு அளிக்கும்பொழுது, பின்வருவனவற்றை விளக்கும் விவர அறிக்கை ஒன்றை அமைச்சர் சமர்ப்பிக்க வேண்டும் என இச்சட்டத்தின் பிரிவு 6 (3) தெரிவிக்கிறது:–

(அ) இந்தச் சட்டத்தின் கீழ் மாநில அரசு மீது சுமத்தப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகளை (obligations) நிறைவேற்றுவதில் காணப்படும் மாறுபாடுகள்;

(ஆ) அவ்வாறு காணப்படும் மாறுபாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தவையா மேலும் அவை உள்ளபடியேயான அல்லது எய்தக்கூடிய வரவு–செலவுத் திட்ட இலக்குகளுடன் தொடர்புடையவையா என்பன பற்றிய விவரங்கள்.

(இ) மாநில அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள சீர்திருத்த நடவடிக்கைகள்.

2006–2007ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் போக்குகள் குறித்த முதல் ஆறு மாத காலத்திற்கான ஆய்வினை, 2006 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29 ஆம் நாளன்று தமிழ்நாடு அரசு நிதி அமைச்சர் நடத்தினார்கள். இந்த ஆய்வின் முடிவு சட்டமன்றப் பேரவைக்கு அளிக்கப்படுகிறது.

## வருவாய் வரவுகள் பற்றிய ஆய்வு

அரசின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் பின்வருவன அடங்கும்:–

அ) மத்திய வரிகளில் தமிழ் நாட்டின் பங்கு

ஆ) மாநிலத்தின் சொந்த வரி வருவாய்கள்

இ) மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய்கள்

ஈ) மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள்.

2006–2007ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் மொத்த வருவாய் வரவுகள் ரூபாய் 38,731.59 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. தொடக்கநிலை விவரக் கணக்குகளின்படி 2006 ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதி வரையில் மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் ரூபாய் 18,082.79 கோடியாக இருந்தது.

இதன்படி, 2006 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாள் வரையிலான மொத்த வருவாய் வரவுகள், திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 46.69 சதவீதமாகும். இது, 2005 செப்டம்பரில் முடிவடைந்த நிகரான கால அளவில் இருந்த வருவாயைவிட 21.23 சதவீத வளர்ச்சியைக் காட்டுகிறது. 2006–2007 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளுடனான ஒப்பீட்டுடன், மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் குறித்த விவரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**30.09.2006 ஆம் நாள் வரையில் தமிழ்நாடு அரசின் மொத்த வருவாய் வரவுகளின் போக்கு**

*(ரூபாய் கோடியில்)*

| வருவாய் வரவுகள் | 2006-2007ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 30.09.2006 வரையிலான தொடக்க நிலை விவரக் கணக்குகள் | திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் சதவீதம் |
|---|---|---|---|
| மத்திய வரிகளில் பங்கு | 6,025.53 | 2,581.06 | 42.84% |
| மாநிலத்தின் சொந்த வரி வருவாய் | 27,010.70 | 13,453.43 | 49.81% |
| மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் | 2,674.41 | 1,079.84 | 40.38% |
| மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் | 3,020.94 | 968.46 | 32.06% |
| **மொத்த வருவாய் வரவுகள்** | **38,731.58** | **18,082.79** | **46.69%** |

அ. **மத்திய வரிகளில் பங்கு :** பன்னிரண்டாவது நிதிக்குழு வகுத்த கொள்கைகளின் அடிப்படையில் இந்தப் பங்கு கணக்கிடப்பட்டு வழங்கப்படுகிறது. பன்னிரண்டாவது நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி, சேவை வரி நீங்கலான நிகர மத்திய வரிகளின் பகிர்ந்தளிக்கத்தக்க

தொகுப்பில் **5.305** சதவீதமும், சேவை வரியில் **5.374** சதவீதமும் தமிழ்நாட்டின் பங்கு ஆகும். இது **2005-2006** ஆம் ஆண்டுக்கான தொடக்க நிலை விவரக் கணக்கிலான தொகையைவிட **20.20** சதவீதம் அதிகமாகும்.

இதில், **2006** ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதி வரையிலான வரவுகள் ரூபாய் 2,581.06 கோடியாகும். தற்போதைய நிலவரப்படி, மதிப்பிடப்பட்ட தொகை எவ்வித குறைவுமின்றி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆ) மாநிலத்தின் சொந்த வரி வருவாய்:** மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வசூலின் போக்கினை பின்வரும் அட்டவணை விளக்குகிறது:

**30.9.2006 வரையில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வசூல்**

***(ரூபாய் கோடியில்)***

| **2006–2007ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு** | **30.09.2006 வரை வசூல்** | **திருத்த வரவு- செலவுத் திட்ட மதிப்பீட்டில் வசூல் சதவீதம்** |
|---|---|---|
| 27,010.70 | 13,453.43 | 49.81% |

நிதி அமைச்சர் அவர்கள் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வசூல் நிலவரம் குறித்து ஆய்வு செய்தார்கள். மாநிலத்தின் சொந்த வரிகளின் முக்கிய இனங்களின் முதல் ஆறு மாத காலப் (செப்டம்பர் வரை) போக்கின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*(ரூபாய் கோடியில்)*

| **மாநில வரிகள்** | **2006–2007 ஆம் ஆண்டின் திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு** | **30.09.2006 வரை வசூல்** | **திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் சதவீதம்** |
|---|---|---|---|
| வணிக வரிகள் | 19,318.62 | 9,576.17 | 49.57% |
| மாநில ஆயத் தீர்வைகள் | 3,673.25 | 1,827.40 | 49.75% |
| முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு கட்டணம் | 2,451.65 | 1,345.77 | 54.89% |
| வண்டிகள் மீதான வரிகள் | 1,248.28 | 643.19 | 51.53% |
| மின்சாரத்தின்மீது வரிகளும் தீர்வைகளும் | 250.00 | 17.84 | 7.14% |
| நில வரி | 52.63 | 36.10 | 68.59% |
| வேளாண்மை நிலம் நீங்கலாக ஏனைய இயங்காச் சொத்து மீது வரிகள் | 16.27 | 6.92 | 42.53% |

2006 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இறுதி வரையிலான மாநிலத்தின் சொந்த வரி வருவாய் ரூபாய் 13,453.39 கோடியாகும். இது, திருத்த வரவு-

செலவுத் திட்ட வருவாய் மதிப்பீட்டில் **49.81** சதவீதம் ஆகும். இது, முந்தைய ஆண்டின் நிகரான காலத்தின் வருவாயோடு ஒப்பிடும்போது **20.06** சதவீத ஒட்டுமொத்த வளர்ச்சியைக் காட்டுகிறது. மின்சாரத்தின் மீதான வரிகளையும், தீர்வைகளையும் தவிர ஏனைய வரிகள் அனைத்தும் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படியே உள்ளதால், நடப்பு ஆண்டில் மதிப்பிடப்பட்ட வருவாயினை உறுதியாகப் பெற முடியும். மின்சாரத்தின் மீதான வரிகள் மற்றும் தீர்வைகள் வசூலிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை தமிழ்நாடு மின்சார வாரியத்தால் அரசுக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளது.

**(இ) மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் :** ரூபாய் 2,674.41 கோடி அளவிலான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கெதிராக, **2006** செப்டம்பர் இறுதி வரையிலான வருவாய் ரூபாய் 1,079.84 கோடியாக உள்ளது. இவ்வாறாக, முதல் அரையாண்டில் வரி அல்லாத வருவாய் வசூல், திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 40.38 சதவீதமாக உள்ளது. இது முந்தைய ஆண்டின் செப்டம்பர் திங்கள் வரையிலான வருவாயைவிட **8.25** சதவீத வளர்ச்சியைக் காட்டுகிறது.

**(ஈ) மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள்:** திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடான

ரூபாய் 3,020.94 கோடியில், செப்டம்பர் **2006** வரையில் மத்திய அரசிடமிருந்து வரப்பெற்ற மொத்த உதவி மானியம் ரூபாய் 968.46 கோடி ஆகும். இது, திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 32.06 சதவீதம் ஆகும். உதவி மானியங்களின் பெரும்பகுதி நிதியாண்டின் இரண்டாவது அரையாண்டில் எதிர்பார்க்கப்படுவதால் இவ்வினத்திலும் குறைவு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு ஏதுமில்லை.

மொத்த வருவாய் வரவுகள், திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டை ஒட்டியே உள்ளதால், அவற்றில் குறைவு ஏதும் ஏற்படாது. **2006** ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் **30**ஆம் நாள் வரையிலான மொத்த வருவாய், கடந்த நிதியாண்டின் நிகர் முதல் ஆறு மாத வசூலைக்காட்டிலும், 21.23 சதவீத அளவிலான வளர்ச்சியைக் காட்டுகிறது.

## செலவு குறித்த ஆய்வு

**2006–2007**ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வருவாய்க் கணக்கு செலவிற்காக ரூபாய் 39,860.82 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொடக்க நிலை கணக்குகளின்படி, **2006** ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இறுதி வரையிலான வருவாய்க் கணக்கு செலவு ரூபாய் 14,884.16 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, வருவாய்க் கணக்குச்

செலவுக்கான மொத்த ஒதுக்கீட்டில் 37.34 சதவீதமாகும். **2005** ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இறுதி வரையிலான, சென்ற ஆண்டு வருவாய்க் கணக்கு செலவு ரூபாய் 13,813.64 கோடி ஆகும். இவ்வாறாக, சென்ற நிதியாண்டின் முதல் அரையாண்டு செலவினத்தைக் காட்டிலும், வருவாய்க்கணக்கில் செலவு 7.75 சதவீதம் அதிகரித்துள்ளது.

**2006–2007**ஆம் ஆண்டு, திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மூலதனச் செலவு மற்றும் நிகரக் கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான செலவிற்காக ரூபாய் 6,102.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொடக்க நிலைக் கணக்குகளின்படி, **2006** ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இறுதி வரையில் நிகர கடன்கள்–முன்பணங்கள் மீதான செலவு உட்பட, மூலதனச்செலவு ரூபாய் 1,551.55 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது, மூலதனச் செலவிற்கான மொத்த ஒதுக்கீட்டில் 25.43 சதவீதமாகும். நிதியாண்டின் அடுத்த பாதியில் மூலதனப் பணிகளின் செயலாக்கம் துரிதப்படுத்தப்படும்.

**2006–2007**ஆம் ஆண்டின் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூபாய் 12,500.00 கோடிக்கான திட்டப்பணிகளின் செயலாக்கம் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. நடப்பு ஆண்டின் முதல் ஆறு மாதத்திற்கான திட்டச் சாதனை ரூபாய் 3,122.91 கோடி ஆகும்.

இது ஒப்புதலளிக்கப்பட்ட முதலீட்டில் 24.98 சதவீதமாகும். நடப்பு ஆண்டுக்கான திருத்த வரவு செலவுத் திட்டம் ஜூலை மாதத்தில்தான் தாக்கல் செய்யப்பட்டது என்ற நிலையை கருத்தில் கொள்ளும்போது, இது ஒப்பிடத்தக்க ஆண்டான 2001-2002 இல் இருந்த போக்கினை ஒட்டியே உள்ளது எனலாம். 2006-2007ஆம் ஆண்டின் திட்ட இலக்கை முழுமையாக எய்துவதற்கும் செயல்பாட்டினை மேம்படுத்துவதற்கும் தேவையான அறிவுரைகள் அனைத்துத் துறைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

## ஒட்டுமொத்த நிதிநிலை குறித்த சுருக்கம்

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் (திருத்தப்பட்டவாறு) குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளுக்கு ஏற்ப, மாநிலத்தின் நிதிநிலையை நிருவகிக்கும்பொருட்டு, 2008–2009 ஆம் ஆண்டுக்குள் வருவாய்க் கணக்குப் பற்றாக்குறையை அறவே நீக்கவும், 2008 ஆம் ஆண்டு மார்ச்த் திங்களுக்குள் நிதிப்பற்றாக்குறையை, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் (GSDP) 3 சதவீத அளவுக்குள் இருக்குமாறு குறைக்கவும் நடுத்தரக் கால நிதித் திட்டம் ஒன்றை அரசு தாக்கல் செய்துள்ளது. ஏழைகள் மற்றும் சமுதாயத்தில் உள்ள நலிந்த பிரிவினர்களின் நலன் பாதிக்கப்படாத வகையில், சமன்பாடற்ற நிதிநிலையைச் சரிசெய்திட

வேண்டுமென்பதே நடுத்தரக் கால நிதித் திட்டத்தின் வழிகாட்டும் கோட்பாடு ஆகும்.

2006–2007ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் வருவாய் பற்றாக்குறை ரூபாய் 1,129.23 கோடியாக மதிப்பிட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரையிலான தொடக்க நிலைக் கணக்குகளின்படி, மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளின் வளர்ச்சி மொத்த வருவாய்க் கணக்கு செலவுகளின் வளர்ச்சியைவிட அதிகமாக உள்ளது. வருவாய்க் கணக்கில் துணை மதிப்பீடுகளின் அடிப்படையில் ரூபாய் 495.15 கோடி அளவில் நிதியாண்டின் இரண்டாவது அரையாண்டில் அதிகச் செலவுப் பொறுப்புகள் உள்ளபோதிலும், 2006 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரையிலான முதல் அரையாண்டிற்கான புள்ளிவிவரங்களின்படியான மொத்த நிதிநிலைப்போக்கு, திருத்த வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்ட வருவாய்ப் பற்றாக்குறையில் முன்னேற்றம் ஏற்படும் என்பதையே சுட்டிக்காட்டுகிறது.

2006–2007ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளுடன் தாக்கல் செய்யப்பட்ட நடுத்தரக் கால நிதித் திட்டம், 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட

இலக்குகளை எய்துவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகளுக்கான செயல் திட்டத்தை அளிக்கிறது.

நடுத்தரக் கால நிதித் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிதிநிலைப் போக்குகள் சரியாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன என்பதையும், இலக்குகள் உறுதியாக எய்தப்படும் என்பதையும் 2006 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாளுடன் முடிவடைந்த காலத்திற்கான இந்த ஆய்வு தெளிவாகக் காட்டுகிறது.

**க. அன்பழகன்,**
**நிதி அமைச்சர்.**

******